சுருக்கம்

மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்களுக்கான நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - லெப்பைகுடிகாடு பேரூராட்சி - பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.99.70 லட்ச மதிப்பீட்டில் செயல்படுத்துதல் – நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை.

அரசாணை (ப) எண்.176 நாள்:17.4.2008

படிக்கப்பட்டது:

பேரூராட்சிகள் ஆணையர் கடிதம் ந.க.எண்.18444/ 2006/ ஆ2, நாள் 28.3.2008.

----------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் தனது கடிதத்தில் திருச்சி மண்டலம், பெரம்பலூர் மாவட்டம், லெப்பைகுடிகாடு பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ரூ.99.70 லட்சம் மதிப்பீட்டிற்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை, மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறை படுத்திடும் பொருட்டு, மாநில அளவிலான அங்கீகாரக் குழுவின் ஒப்புதலினை பெற்றிட திட்ட அறிக்கை 31.1.2007 நாளிட்ட பேரூராட்சிகளின் ஆணையரக் கடிதத்தின் மூலம் டுபிட்கோ நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது என்றும் மேற்படி திட்ட அறிக்கைக்கு 24.2.2007ல் நடைபெற்ற மாநில அளவிலான அங்கீகாரக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் அதனைத் தொடர்ந்து டுபிட்கோ நிறுவனத்தினால் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.99.70 லட்சமாகும் என்றும் இதில் மத்திய அரசு பங்குத் தொகை, மாநில அரசு பங்குத் தொகை, பேரூராட்சியின் பங்குத் தொகையின் விவரங்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:-

| | | |
|---|---|---|
| மத்திய அரசு நிதியுதவி 80% | - | ரூ.79.76 லட்சம் |
| மாநில அரசு நிதியுதவி 10% | - | ரூ.9.97 லட்சம் |
| பேரூராட்சியின் பங்குத்தொகை 10% | - | ரூ.9.97 லட்சம் |
| | | ரூ.99.70 லட்சம் |

2. மேலும் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள் லெப்பைகுடிகாடு பேரூராட்சிக்கு

பங்குத் தொகையாகக் கொண்டும் இத்திட்டத்தினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்றம் தனது தீர்மானம் எண்.9, நாள் 18.1.2007ல் இசைவளித்துள்ளது என்றும் ஆகவே திருச்சி மண்டலம், பெரம்பலூர் மாவட்டம், லெப்பைகுடிகாடு பேரூராட்சியில் ரூ.99.70 லட்சம் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசின் நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் காணும் பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து லெப்பைகுடிகாடு பேரூராட்சியில் ரூ.99.70 லட்சம் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டத்தை சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-108.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை-35,
மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் மாவட்டம்.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம்.
செயல் அலுவலர், லெப்பைகுடிகாடு பேரூராட்சி, பெரம்பலூர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாநில கணக்காயர்(தணிக்கை), சென்னை-18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-9.
நகல்: நிதித் (நநிகுவ) துறை, சென்னை-9.
ந.நி. (ம) கு.வ. (வரவு செலவு / அந.2) துறை, சென்னை-9.

-/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

பிரிவு அலுவலர்